நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, தலை ஞாயிறு, தஞ்சை மாவட்டம்— ஒரு டன்னுக்கு 75 ரூபாய்; திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை 60 ரூபாய்; தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை 50 ரூபாய்; கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 50 ரூபாய்; சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 45 ரூபாய்; மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 35 ரூபாய்; அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 20 ரூபாய்; வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 20 ரூபாய்; ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர், மதுரை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகியவற்றுக்குத் தலா டன்னுக்கு 10 ரூபாய் என்று வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் அந்தந்த ஆலைகள் ஈட்டிய இலாபத்தைக் கணக்கில் கொண்டு கூடுதல் கரும்பு விலை கொடுப்பது மரபாகும். இதன்படி 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கூடுதல் கரும்பு விலையாக டன் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ரூ. 10 ஆகவும், அதிக பட்சம் ரூ. 75 ஆகவும் வழங்க தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று ஆணை வழங்கியுள்ளார்கள். இவ்வாண்டு இரண்டு இலட்சத்து இருபதாயிரம் கரும்பு விவசாயிகள் ரூ. 13.05 கோடியும் மொத்தக் கூடுதல் கரும்பு விலையாகப் பெறுவார்கள். இது கடந்தாண்டு கொடுத்த ரூபாயை விட ரூபாய் 6 கோடியே 48 இலட்சம் கூடுதலாகும். இப்பணம் கரும்பு விவசாயிகளுக்கு வரும் தீபாவளிப் பண்டிகைக்கு முன்பே வழங்கப்படும் என்ற இனிய செய்தியை இந்த மாமன்றத்திற்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.